# நானும் என் கவிதைகளும

*- By **Mr S. Sundaram,** Former Deputy General Manager, Indian Bank*

கல்லூரி நாட்களில் வேடிக்கைக்காக கவிதைகளை இட்டுக் கட்டி நண்பர்களிடம் காட்டுவேன். இந்த பழக்கம் வேலைக்கு சேர்ந்த பின்னும் விடவில்லை. 1975 ஆம் ஆண்டு ஒரு பிரிவு உபசார விழாவுக்காக கவிதை ஒன்று எழுதி நண்பர்களிடம் காட்டினேன். B.G. ராஜேந்திரன் என்னும் நண்பர் (Indran, Winner of Sahitya Akademi Award for Translation ) அதை படித்து விட்டு, "தப்பாக எடுத்துக் கொள்ளாதே. கவிதையில் உணர்ச்சி இருக்க வேண்டும். பாரதியார் எழுதிய காற்று வெளிதனில் கண்ணம்மா உந்தன் காதலை எண்ணிக் களிக்கின்றேன். அமுதூற்றினை ஒத்த இதழ்களும் நிலவூறித் ததும்பும் விழிகளும் என்ற வரிகளில் தான் எத்தனை உணர்ச்சிகள். நீ அந்த மாதிரி எழுத முயற்சி செய் என்றார்". அத்துடன் கவிதை எழுதுவதை நிறுத்தி தமிழ் தாய்க்கும் தமிழ் கூறும் நல்லுலகிற்கும் என்னாலான உபகாரத்தை செய்தேன்.

பல வருடங்ளுக்குப் பின் என் குழந்தைகள் தமிழ் பாடல்களை படிக்கும் போது மீண்டும் கவிதை எழுதும் ஆசை துளிர் விட்டது. ஒரு நாள் திடீரென்று மனதில் தோன்றிய கவிதையை எழுதினேன். என் மகள் அதை பார்த்து விட்டு அப்பா, "இந்த மாதிரி நீங்கள் எதையாவது எழுதி வைத்தால் ;அதை தமிழ் பாடத்தில் சேர்த்து விட்டு, மனப்பாடம் செய் என்று வாட்டுவாங்க. பசங்க எல்லாம் உங்களைத் திட்டிக் கொண்டே படிப்பாங்க.இது உங்களுக்கு தேவைதானா" என்று கேட்டாள். அன்று விட்டதுதான். அப்படி தப்பி தவறி ஏதாவது எழுதினால் கூட யாரிடமும் காட்ட மாட்டேன்.

2011–2012ல் என் பேத்தியின் விஷமங்களைப் பார்த்து ஒரு கவிதையும், தாயன்பு பற்றி ஒரு கவிதையும் எழுதி ஏதோ ஒரு ஆர்வத்தில் Indimage ல் (Office House Journal) கொடுத்து பிரசுரமும் ஆகி விட்டது. அதை படித்து விட்டு என் நண்பர் ஒருவர் போன் செய்து "எங்க சுட்டீங்க இதை"என்றாரே பார்க்கலாம். வீட்டுக்கு சென்ற பின்னும் அவருடைய கேலியின் தாக்கத்தில் இன்னொரு கவிதை பிறந்தது.

முந்திவரும் சிந்தனைகள் முழுமையுற்று
முத்து முத்தாய் மலரும் என் கவிதை வரிகள்
எந்தவொரு ஏட்டினிலும் வந்ததில்லை
என்மனத்துள் புதையுண்டு மடியும் பாவம்
இந்த முறை எப்படியோ இரண்டு கவிதை
இன்டி மேஜில் இடம்பெற்று வந்த போது
என் திறனை அறியாத நண்பர் ஒருவர்
எங்கிருந்து சுட்டீர் இக்கவிதை என்றார்.

இதை எழுதி முடித்த பின் ஒரு அமைதி கிடைத்தது. கவிதை எழுதுவது நம் மகிழ்ச்சிக்காக. மற்றவர் பாராட்டுக்கல்ல என்ற ஞானம் பிறந்தது.